பக்கங்கள்: 07
# காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு
சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 பங்குனி 6 புதன்கிழமை 13.04.2022 கதிர் 28

## நிதி அமைச்சருடன் சீனத் தூதுவர் பேச்சு

கொழும்பிலுள்ள சீனத் தூதுவருக்கும் நிதி அமைச்சர் அலி சப்றிக்கும் இடையில் மிக முக்கிய கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது.

இதன்போது இலங்கை எதிர்நோக்கியுள்ள பொருளாதார நெடிக்கடி தொடர்பில் மிக ஆழ மாகக் கலந்துரையாடப்பட்டுள்ளது ☞2

# ஐந்தாவது நாளாகத் தொடர்கின்றது 'கோ ஹோம் கோட்டா' போராட்டம்!

### ஜனாதிபதி செயலகத்தை முற்றுகையிட்டு நாள்தோறும் அணிதிரண்டு வரும் மக்கள்

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை உடனடியாகப் பதவி விலகி வீட்டுக்குச் செல்லுமாறு வலியுறுத்தி கொழும்பு - காலிமுகத் திடலில் கடந்த சனிக்கிழமை ஆரம்பமான மக்களின் தன்னெழுச்சிப் போராட்டம் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

ஒரே நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் வரும் மக்கள் ஓரணியாக கொழும்பு - காலிமுகத்திடலில் ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாக அணிதிரண்டு வருகின்றனர்.

தொடர்ச்சியாக 5 ஆவது நாளாக இந்தப் போராட்டத்தை அவர்கள் முன்னெடுத்து வருகின்றனர். ☞2



## ஆர்ப்பாட்டக்காரர்களுடன் நேரடிப் பேச்சுக்குத் தயார்

### பிரதமர் மஹிந்த அழைப்பு



கொழும்பு – காலி முகத்திடலில் ஜனாதிபதி செயலகத்தை முற்றுகையிட்டுப் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் மக்களுடன் நேரில் பேச்சு நடத்துவதற்கு அரசு தயாராகவே இருக்கின்றது என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். ☞2

## ராஜபக்ஷக்களை விரட்டியடிப்போம்

### விமல் சூளுரை



பழையபாதையில் பயணிப்பதற்கே ராஜபக்ஷக்கள் முயற்சிக்கின்றனர். நாடாளுமன்ற உறுப்பினர்களை விலைக்கு வாங்குகின்றனர். நாட்டு மக்கள் இதற்கு இடமளிக்கமாட்டார்கள். ராஜபக்ஷக்களை நிச்சயம் விரட்டுவோம்.

- இவ்வாறு தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான விமல் வீரவன்ஸ எம்.பி. தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

நாட்டிலுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வைத் தேடாது, இழுத்தடிப்புச் செய்து, பழைய பாதையில் பயணிப்பதற்கு ராஜபக்ஷக்கள் முயற்சிக்கின்றனர். எம்.பிக்களை விலைக்கு வாங்கி ஆட்சியைத் தக்கவைத்துக்கொள்ள சதி செய்கின்றனர். ☞2

# அரசுக்கு எதிரான பிரேரணைகளில் ஐக்கிய மக்கள் சக்தி கையொப்பம்!

### சஜித் தலைமையில் ஆட்டம் ஆரம்பம்

அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையிலும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிரான குற்றப் பிரேரணையிலும் ஐக்கிய மக்கள் சக்தி கையொப்பமிட்டுள்ளது. ☞2



## நம்பிக்கையில்லாப் பிரேரணையில் முன்னணியின் எம்.பிக்கள் ஒப்பம்!



ஐக்கிய மக்கள் சக்தியால் முன்வைக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் செல்வராசா கஜேந்திரன் ஆகியோர் இன்று ☞2

## 325 கிலோ போதைப்பொருளுடன் தென் கடற்பரப்பில் அறுவர் கைது




(ந.லோகதயாளன்)

தென் கடற்பரப்பில் பெருமளவு போதைப்பொருள்களுடன் படகு ஒன்று கைப்பற்றப்பட்டுள்ளது. கடற்படை, பொலிஸ் போதைப்பொருள் ☞2

# இறம்பொடை நீர்வீழ்ச்சியில் சாகடிக்கப்பட்ட வவுனியா இளையோர்!

### ஒருவர் சடலமாக மீட்பு; ஏனைய இருவரின் சடலங்களைத் தேடி வேட்டை








(வவுனியா, நுவரெலியா நிருபர்கள்)

வவுனியாவிலிருந்து நுவரெலியாவுக்குச் சுற்றுலா சென்றவேளை, இறம்பொடை நீர்வீழ்ச்சியில் அடித்துச்செல்லப்பட்டு காணாமல்போயிருந்த மூன்று பேரில், யுவதி ஒருவரின் சடலம் இன்று காலை மீட்கப்பட்டுள்ளது. மற்றைய யுவதியும், இளைஞரும் நீரில் மூழ்கி பலியாகியிருக்கலாம் என அச்சம் வெளியிடப்பட்டுள்ள நிலையில், அவர்களின் சடலங்களை மீட்பதற்கான தேடுதல் வேட்டை தொடர்ந்து இரண்டாவது நாளாகவும் இடம்பெற்று வருகின்றது.

வவுனியா மாவட்டத்திலுள்ள ஆடைத் தொழிற்சாலையொன்றில் பணிபுரியும் இளைஞர்கள், ☞2

## நிதி அமைச்சருடன்.......



(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனச் சீனத் தூதரகத்தின் டுவிட்டர் பதிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இலங்கை மற்றும் சீனா ஆகிய நாடுகளுக்கிடையில் நிதி, பொருளாதாரம், வர்த்தகம் மற்றும் முதலீட்டு ஒத்துழைப்பு தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடல்கள் இடம்பெற்றுள்ளன.

இலங்கையின் கடினமான அனைத்துச்சந்தர்ப்பத்திலும்இலங்கைக்குச் சீனா உதவி வழங்கும் என இலங்கைக்கான சீனத் தூதுவர் தெரிவித்துள்ளார்.

## அரசுக்கு எதிரான...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன்படி நேற்று எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் வைத்து எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மற்றும் அவர் தலைமையிலான நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு இது தொடர்பான ஆவணத்தில் கைச்சாத்திட்டுள்ளனர்.

இதன்போது எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கையில்,

அரசுக்கு எதிராக வீதியில் இறங்கிப் போராடும் மக்களின் இதயத்துடிப்போடு ஐக்கிய மக்கள் சக்தி ஒன்றிணைந்து நிற்கின்றது. இதற்காக நாடாளுமன்றத்தில் சாத்தியமான அனைத்து ஜனநாயக வெற்றிகளையும் அடைவதற்காக நாங்கள் பாடுபடுவோம். நம்பிக்கையில்லாப் பிரேரணை மற்றும் குற்றப்பிரேரணைக்கு மேலதிகமாக, அரசமைப்பின் 20ஆவது திருத்தம் தலைகீழாக மாற்றப்பட்டு 19 ஆவது திருத்தம் மீண்டும் செயற்படுத்தப்பட நடவடிக்கை எடுப்போம். அரசமைப்பு வழிமுறைகள் மூலம் ஜனநாயகத்தின் அனைத்து வெற்றிகளையும் அடைவதற்கான போராட்டம் உறுதியான முறையில் மேற்கொள்ளப்படும் - என்றார்.

நாடாளுமன்றம் எதிர்வரும் 19ஆம் திகதி கூடவுள்ளது. அன்றைய தினம் அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை கையளிக்கப்படும் எனத் தெரியவருகின்றது. அதன்பின்னரே ஜனாதிபதிக்கு எதிரான குற்றப் பிரேரணை ஒப்படைக்கப்படும்.

## ராஜபக்ஷக்களை.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவ்வாறு உருவாகும் ஆட்சியை மக்கள் விரட்டியடிப்பார்கள்.

இந்த விடயத்தில் அவர்கள் உறுதியாகவே உள்ளனர். நாமும் எமது போராட்டத்தை தீவிரப்படுத்துவோம் - என்றார்.

## ஆர்ப்பாட்டக்காரர்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆர்ப்பாட்டக்காரர்கள் முன்வந்தால் அவர்களுடன் நானே நேரில் பேச்சு நடத்துவதற்குத் தயாராக உள்ளேன் என்று பிரதமர் இன்று அறிவிப்பு விடுத்துள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசு பதவி விலக வேண்டும் என வலியுறுத்தி காலிமுகத்திடலில் மக்கள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இன்று ஐந்தாவது நாளாகவும் போராட்டம் தொடர்கின்றது.

இந்நிலையிலேயே ஆர்ப்பாட்டக்காரர்களுடன் நேரடிப் பேச்சுக்குப் பிரதமர் அழைப்பு விடுத்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவிக்கையில்,

சமூக, பொருளாதார மற்றும் அரசியல் காரணங்களுக்காகக் காலிமுகத்திடலில் தற்போது ஒன்றுகூடியுள்ள ஆர்ப்பாட்டக்காரர்களுடன் பிரதமர் என்ற ரீதியில் கலந்துரையாடுவதற்கு நான் தயாராக இருக்கின்றேன்.

அதற்கமைய, நாடு எதிர்நோக்கியிருக்கும் தற்போதைய சவாலை வெற்றிகொள்வதற்கு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் தெரிவிக்கும் பெறுமதியான கருத்துக்கள் குறித்து கலந்துரையாடுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்தக் கலந்துரையாடலுக்கு ஆர்ப்பாட்டக்காரர்கள் தயாராக இருந்தால் அவர்களின் பிரதிநிதிகளை கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்கின்றேன் - என்றார்.

## ஐந்தாவது..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி மற்றும் அரசைப் பதவி விலகுமாறு கோரியே இந்தத் தொடர் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இதேவேளை, அரசுக்கு எதிராக நாட்டின் பல பகுதிகளிலும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

## நம்பிக்கையில்லாப் ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காலை கொழும்பிலுள்ள எதிர்க் கட்சித் தலைவர் அலுவலகத்தில் வைத்து கையொப்பமிட்டனர்.

இந்த நிகழ்வில் ஐக்கிய மக்கள் சக்தியைப் பிரதிநிதித்துவப்படுத்தி சிரேஷ்ட பிரதித் தலைவர் இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் கலந்துகொண்டார்.

## 325 கிலோ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒழிப்புப்பிரிவு மற்றும் அரசபுலனாய்வுப் பிரிவு என்பன இணைந்து முன்னெடுத்த சுற்றிவளைப்பில் இந்தப் படகு கைப்பற்றப்பட்டுள்ளது.

குறித்த படகில் 300 கிலோகிராம் ஹெரோயினும், 25 கிலோ கிராம் ஐஸ் போதைப்பொருளும் உள்ளன என்று சந்தேகிக்கப்படுகின்றது.

படகில் இருந்த இலங்கையைச் சேர்ந்த 6 சந்தேகநபர்களும் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று கடற்படை தெரிவித்துள்ளது.

## இறம்பொடை...........

முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யுவதிகள் 48 பேர், புத்தாண்டை முன்னிட்டு நுவரெலியாவுக்கு நேற்று சுற்றுலா சென்றுள்ளனர்.

இவ்வாறு சுற்றுலா செல்லும் வழியில், நுவரெலியா மாவட்டத்துக்குட்பட்ட பகுதியான இறம்பொடையில் உள்ள நீர்வீழ்ச்சிக்கு அருகாமையில் பஸ்ஸை நிறுத்திவிட்டு, நீர்வீழ்ச்சியையும், அதனைச் சூழவுள்ள இயற்கை பகுதிகளையும் பார்வையிடுவதற்கு இளைஞர்கள், யுவதிகள் குழுக்களாகப் பிரிந்து சென்றுள்ளனர்.

இதில் ஆறு யுவதிகளும், இளைஞர் ஒருவரும் என 7 பேர் கொண்ட குழுவினர் இறம்பொடை நீர்வீழ்ச்சி அமைந்துள்ள ஆற்றுப் பகுதியில் நீராடச் சென்றுள்ளனர். 'செல்பி'களை எடுத்தும் மகிழ்ந்துள்ளனர். எனினும், அவர்களின் சந்தோசம் நீடிக்கவில்லை.

திடீரென ஆற்றுப் பகுதியில் நீர்மட்டம் அதிகரித்ததால் அவர்கள் நீரில் அடித்துச் செல்லப்பட்டுள்ளனர். அவர்கள் கூக்குரல் எழுப்ப, அப்பகுதியில் இருந்து சிலர் வந்துள்ளனர். அதற்குள் 4 யுவதிகளை அவர்களுடன் சென்ற இளைஞர் காப்பாற்றி கரைசேர்த்துள்ளார். ஏனைய இரு யுவதிகளையும் காப்பாற்ற முற்பட்ட வேளையிலேயே மூவரும் நீரில் அடித்துச்செல்லப்பட்டுள்ளனர்.

கொத்மலை பொலிஸார், நுவரெலியா மாவட்ட இராணுவ முகாமின் இராணுவத்தினர், கடற்படை சுழியோடிகள் சம்பவ இடத்துக்கு வந்து, மீட்புப் பணிகளை ஆரம்பித்தனர். இந்நிலையில், இன்று காலை யுவதி ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

வவுனியா, நெடுங்கேணியைச் சேர்ந்த புவனேஸ்வரன் வினோதனி (வயது - 18), வவுனியா, கல்மடு - ஈஸ்வரபுரம் பகுதியைச் சேர்ந்த பொன்னுத்துரை மதுசாலினி (வயது - 21) ஆகிய இரு யுவதிகளும், வவுனியாவைச் சேர்ந்த விதுசான் (வயது - 21) ஆகிய மூவருமே நீரில் மூழ்கியிருந்தனர். இவர்களில் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ள நிலையில், ஏனைய இருவரும் உயிரிழந்துள்ளமை உறுதியாகியுள்ளது.

மலைநாட்டில் தற்போது கடும் மழை பெய்துவருகின்றது. எனவே, நீர்வீழ்ச்சி மற்றும் ஆறுகளின் நீர் மட்டம் திடீரென அதிகரிக்கக்கூடும். எனவே, சுற்றுலா வருபவர்கள் அவதானத்துடன் செயற்பட வேண்டும் என அதிகாரிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இறம்பொடை நீர்வீழ்ச்சி பகுதியில் சுற்றுலாப் பயணிகளிடம் கட்டணம் அறவிடப்பட்டாலும், அப்பகுதியில் எவ்வித எச்சரிக்கை அறிவித்தல்களும் இல்லை, மக்களுக்கு உரிய அறிவுறுத்தல்கள் வழங்கப்படுவதும் இல்லை என பிரதேச மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். வருடாந்தம் இவ்வாறான அனர்த்தங்கள் இடம்பெறுவது வழமையாகிவிட்டன எனவும், பொறுப்புக்கூற வேண்டியவர்கள் உரிய கவனம் செலுத்துவதில்லை எனவும் மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622



காலைக்கதிர் மாலைப்பதிப்பு



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## நாட்டின் விடியல்

ஜனாதிபதி கோட்டாபயவைப் பதவியைத் துறந்து வீட்டுக்குப் போகுமாறு கோரி காலிமுகத்திடலில் பாதுகாப்பு அமைச்சு மற்றும் ஜனாதிபதி செயலகம் போன்றவற்றுக்கு முன்னால் அமைதி வழியில் ஜனநாயகப் போராட்டத்தில் குதித்து இருக்கும் இலங்கையின் இளந்தலைமுறையின் – இளைஞர்களின் –அரசியல் செயற்பாடு பலரையும் வியக்க வைக்கின்றது.

முன்பின் இல்லாத ஒரு முறைமையாக – இளைஞர்க ளின் இடைவெளியற்ற தொடர்ச்சியான போராட்டமாக – இது கட்டவிழ்கின்றது.

அரசியல் கட்சிகளோ, பிற அமைப்புகளோ அவர்களை ஒன்றிணைக்கவில்லை. இயல்பாகவே – தாங்களாகவே – அவர்கள்தமதுநாடுஎன்றஒரேநோக்கத்திற்காக–ஒன்றிணைந்து இருக்கின்றார்கள். தங்கள் இலக்கில் அவர்கள் தெளிவாகவும் உறுதியாகவும் இருக்கின்றனர். மழை, வெயில், குளிர், காற்றுப் பற்றியெல்லாம் பொருட்படுத்தாமல், அவை ஏற்படுத்தும் நலிவுகளையும் துன்பங்களையும் தாங்கிச் சுமந்தபடி, எதிர்கொண்டபடி தங்கள் இலக்கில் அவர்கள் தெளிவாகவும் உறுதியாகவும் இருக்கின்றனர். அது, தமது நிலைப்பாட்டில் – போராட்ட வடிவத்தில் – எத்தனை தூரம் அவர்கள் திடமாக உள்ளனர் என்பதை அப்பட்டமாக எடுத்தியம்பி நிற்கின்றது.

தமது போராட்ட வடிவத்தில், ஒழுங்கு விதிமுறைகளில் அவர்கள் தெளிவாக இருக்கின்றனர். கடும் மழை முதலிய இயற்கைச் சீற்றங்களுக்கு மத்தியிலும் ஐந்து நாள்களை அத்தனை ஆயிரம் பேர் அங்கு திரண்டு ஒன்றாக இருந்து கழித்தும் கூட சுத்தம் பேணப்படுகின்றது. நேர்த்தி கடைப்பிடிக்கப்படுகின்றது. ஒழுங்கு முறை தவறப்படவில்லை. உணவுக்கோ, குடிதண்ணீருக்கோ, பிற தேவைகளுக்கோ குழப்பமோ, முண்டியடிப்போ இல்லை. ஆர்ப்பாட்டத்தில் கூட நேரிய ஒழுங்குமுறை பின்பற்றப்படுகின்றது. இளைஞர்களாகப் பல்லாயிரம் பேர் திரண்டும் அவர்கள் கருத்திலோ, செயலிலோ, போராட்ட வடிவத்திலோ, வன்மமோ வன்முறையோ துலங்கவில்லை. தம்மை அடக்கிக் கட்டுப்படுத்த நிற்கும் பொலிஸாருக்கும் அன்புப் பரிசாக பூக்களை வழங்கும் அகிம்சை மார்க்கம்தான் தென்படுகின்றது. தங்கள் கருத்துகளை வெளிப்படுத்தும் கோஷங்களில் அரசியல் எதிர்ப்புணர்வு மற்றும் ஆவேசங்களை அவர்கள் வெளிப்படுத்தினாலும் அவற்றில் கூட ஓர் ஒழுங்கு முறைமை காணப்படுகின்றது.

அவர்களின் போராட்டம் குறித்து முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சுட்டிக்காட்டும் சில விடயங்கள் நோக்கற்பாலவை.

“பெரியதொரு அரசியல் புரட்சியை ஏற்படுத்தும் இலக்கில் இளைஞர்கள் போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றது. மிகவும் அமைதியான முறையில், நேர்த்தியாக, அனைவரும் ஒரே நிலைப்பாட்டில் ஒன்று கூடியுள்ளனர், இவர்களில் எவரும் பஸ்ஸிலோ அல்லது லொறிகளிலோ கொழும்புக்குக் கூட்டி வரப்பட்டவர்கள் அல்லர். தாமாகத் திரண்ட போராட்ட அணி இது. அவர்கள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை வீட்டுக்குச் செல்லுமாறு கூறுகின்றனர். அவர் செல்லவில்லை. இளைஞர்களின் இந்தப் புரட்சி மேலும் தீவிரம் அடைந்தால் அது பாரதூரமானதாகும். இளைஞர்கள் ஆட்சியில் புரட்சியை ஏற்படுத்த எதிர்பார்க்கின்றனர். தங்களின் எதிர்காலத்திற்காக இளைஞர்கள் இந்த அமைதியான போராட்டத்தை அதே வடிவத்தில் தொடர வேண்டும். அது நிச்சயம் வெற்றி பெறும்” – என்று ரணில் விக்கிரமசிங்க கூறியிருக்கிறார்.

“ராஜபக்ஷக்களுக்கு எதிரான போராட்டம் நாளுக்கு நாள் தீவிரமடைந்து வருகின்றதே தவிர, குறையவில்லை. ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கத்தை நாட்டு மக்கள் புறக்கணிக்கிறார்கள்.” – என்று நேற்றுவரை ஜனாதிபதியோடு சேர்ந்திருந்த அவரது சகா வாசுதேவ நாணயக்கார இப்போது கூறுகின்றார்.

இளைஞர்களின் இந்தத் தனித்துவமான அரசியல் போராட்டம் முழு இலங்கை மக்களின் எதிர்காலம் பற்றிய எதிர்பார்ப்பின் பிரதிபலிப்பு. நம்பிக்கையின் ஒளிக்கீற்று.

மீள முடியாத நெருக்கடியில் – பொருளாதார ரீதியில் அதலபாதாளத்தில் – வீழ்ந்திருக்கும் நாட்டைக் கரை ஏற்றுவதற்கு அரசியல் தலைமைகள் மட்டுமல்ல, அரசியல் முறைமைகளும் முழுமையாக மாற வேண்டும். நமது நாட்டின் அரசியல் கட்டமைப்பின் வடிவத்தை முழுமையாக மாற்றி, ஒழுங்குபடுத்தி சீரமைக்க வேண்டும்.

அதற்கான தூர் வாரலைத்தான் காலிமுகத்திடலில் நமது இளைஞர்கள் இனம், மதம், மொழி, குலம் கடந்து ஒன்றுபட்டு சுயமாக ஆரம்பித்திருக்கிறார்கள். முழு நாட்டு மக்களினதும் தார்மீக ஆதரவு அதற்கு அவர்களுக்கு அவசியம். அந்த ஜனநாயகப் போராட்டத்தின் வெற்றியில் தான் இந்த நாட்டின் அரசியல் விடியல் தங்கியிருக்கின்றது.

# மக்கள் போராட்டத்தை அரசியல் போராட்டம் என அடையாளப்படுத்துவதற்கு எத்தனிக்கக் கூடாது!

## நிமல் சிறிபால டி சில்வா எம்.பி. கூறுகிறார்



இடைக்கால அரசாங்கத்தை ஸ்தாபிப்பது தொடர்பில் நாடாளுமன்றில் அங்கம் வகிக்கும் சகல கட்சிகளுடன்குழுஅடிப்படையில் பேச்சுக்களை முன்னெடுப்போம்.

நடைமுறையில் தோற்றம் பெற்றுள்ள பிரச்சினைக்கு இடைக்கால அரசாங்கத்தின் ஊடாகவே தற்காலிகத் தீர்வை பெற்றுக் கொள்ள முடியும் என ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உபதலைவர் நிமல் சிறிபாலடி சில்வா எம்.பி. தெரிவித்தார்.

என்.எம்.பெரேரா மத்திய நிலையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையிலேயே மேற்கண்டவாறு அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

தவறானஅரசியல்மற்றும்பொருளாதாரக் கொள்கையால் நாடு பாரிய நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது. பொருளாதார நெருக்கடியைத் தாங்கிக்கொள்ளாத நிலையில் மக்கள் வீதிக்கு இறங்கியுள்ளார்கள். மக்களின் போராட்டத்தை அரசியல் போராட்டம் என அடையாளப்படுத்த முடியாது.

தற்போதைய நெருக்கடிக்குத் தீர்வு காண்பதற்கு இடைக்கால அரசாங்கம் ஒன்றை ஸ்தாபிப்பதைத் தொடர்ந்து மாற்று தீர்வு எதும் கிடையாது. புதிய பிரதமர் தலைமையில் அனைத்துக் கட்சிகளையும் உள்ளடக்கிய இடைக்கால அரசாங்கத்தைஸ்தாபிப்பது சிறந்தது என்பதை மகா சங்கத்தினரும் ஏற்றுக் கொண்டுள்ளார்கள். இடைக்கால அரசாங்கம் தொடர்பில் ஜனாதிபதியுடன் இடம்பெற்ற பேச்சு சாதகமான தன்மையில் காணப்படுகிறது. நாடாளுமன்றில் அங்கம் வகிக்கும் சகல கட்சிகளுடன் ஒரு குழுவாக ஒன்றிணைந்து பேச்சில் ஈடுபடத் தீர்மானித்துள்ளோம். புதிய அரசமைப்பு திருத்தம், நிறைவேற்றுஅதிகாரம்கொண்டஜனாதிபதிமுறைமை உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் தற்போது அவதானம் செலுத்தப் பட்டுள்ளது. இடைக்கால அரசாங்கத்தில் அரசமைப்பின் 20 ஆவது திருத்தம் நீக்கம் தொடர்பாக அதிக கவனம் செலுத்தப்படும். – என்றார்.

# இது போன்றதோர் ஆட்சியை என் வாழ்நாளில் கண்டதில்லை

## பிரபல பாடகி நந்தா மாலினி தெரிவிப்பு

என் வாழ்வில் இதுபோன்று மக்களை துயரத்திற்குள்ளாக்கிய ஆட்சியை கண்டதுமில்லை, கேள்விப்படவுமில்லை. இளைஞர்களின் தன்னிச்சையான போராட்டம் நிச்சயம் வெற்றிபெறும், முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம் என பாடகி நந்தா மாலினி தெரிவித்தார்.

ஜனாதிபதி செயலகம் முன்பாக இளைஞர்களால் கடந்த 5 நாள்களாகத் தொடர்ச்சியாக அரசாங்கத்துக்கு எதிராக முன்னெடுத்து வரும் போராட்டத்தில் கலந்துகொண்டு ஊடகங்களுக்குக் கருத்துரைக்கையிலேயே மேற்கண்டவாறு அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு:–

எனது வாழ்க்கையில் இவ்வாறானதொரு கேவலமானதும், மக்களைத் துயரத்திற்குள்ளாக்கியதுமான ஆட்சியை ஒரு போதும் நான் கண்டதுமில்லை; கேள்விப்பட்டதுமில்லை. அதேபோல் இளைஞர்களின் தன்னிச்சையான போராட்டத்தையும் நான் கண்டதில்லை.

அரசியல் கட்சிகளின் ஆதரவு இல்லாமல் தன்னிச்சையாகஇளைஞர்கள்ஒன்றிணைந்துள்ளார்கள். தங்களுக்குத் தேவையானவற்றை இளைஞர்கள் கோரவில்லை.

வெயிலில் காய்ந்து, மழையில் நனைந்து இளைஞர்கள் எதிர்கால தலைமுறையினருக்காக நாட்டையே கோருகிறார்கள்.

‘புதிய உலகம் பற்றி நினைப்பது தண்டனைக்குரிய குற்றமாயின் நாட்டில் நீதிமன்றம் மற்றும் சட்டம் எதற்கு?’

நாம் குறிப்பிட்ட விடயங்களை இன்று இளம் தலைமுறையினர் விளங்கிக் கொண்டுள்ளார்கள், இளம் தலைமுறையினரின் போராட்டம் நிச்சயம் வெல்லும்.முழுமையான ஆதரவை வழங்குவோம். – என்றார்.

# மருத்துவம் மக்களின் அடிப்படை உரிமை மாங்குளம் வைத்திய ஊழியர்கள் கவனவீர்ப்பு






(சண்முகம் தவசீலன்)

நாட்டின் தற்போதய சூழலில் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ள நிலையில்மக்கள் பல்வேறுதேவைகளுக்கும் வரிசையில் நிற்கும் நிலை உருவாகியுள்ளது. இவ்வாறான பின்னணியில் மக்களின் மருத்துவ தேவைகளை பூர்த்தி செய்யமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதையும் மருந்து பொருள்களின் தட்டுப்பாட்டு நிலையையும் வெளிக்காட்டும் முகமாக நேற்று முன்தினம் மாங்குளம் வைத்தியசாலைக்கு முன்பாக கவனவீர்ப்புப் போராட்டமொன்றை முன்னெடுத்தனர்

திங்களன்று காலை 11 மணியளவில் மாங்குளம் வைத்தியசாலை மருத்துவர்கள், ஊழியர்கள் இணைந்து மாங்குளம் வைத்தியசாலை முன்பாக இந்த கவனவீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இந்த போராட்டத்தில் கலந்துகொண்டவர்கள் மருத்துவம் மக்களின் அடிப்படை உரிமை, மக்களின்உயிர்களுடன்விளையாட வேண்டாம், மருத்துவப் பற்றாக்குறையை நிவர்த்தி செய், இலவச சுகாதாரம் ஆபத்தில் உள்ளது, அனைவரது உயிர்களும் ஆபத்தில் உள்ளன, இன்று இலவச மருத்துவம் இழந்த நிலையில் இலங்கை மக்கள் – போன்ற வாசகங்கள் எழுதிய பதாதைகளைத் தாங்கியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

# உக்ரைன் மீதான ரஷ்யாவின் நடவடிக்கை இனப்படுகொலைக்கு சமன் என்கிறார் பைடன்



உக்ரைன் மீதான ரஷ்யாவின் ஆக்கிரமிப்பு போர் இனப்படுகொலைக்கு சமமானது என அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

உக்ரைன் விவகாரத்தில் ரஷ்யாவின் இனப்படுகொலை என்ற சொல்லாட்சியை பைடன் நேரடியாக கையாண்டிருப்பது இதுவே முதன்முறையாகும்.

அயோவாவில் உள்ள ஒரு எதனால் தொழிற்சாலையில் இடம்பெற்ற நிகழ்வில் நேற்று பேசும்போதே ரஷ்யா மீதான இனப்படுகொலை குற்றச்சாட்டை பைடன் முன்வைத்தார்.

உக்ரைனில் இடம்பெறுவது ரஷ்யாவின் இனப்படுகொலை என்றே எனக்குத் தோன்றுகிறது. எனினும் இது இனப்படுகொலையா? இல்லையா என்பதை சர்வதேச சட்ட வல்லுநர்கள் தீர்மானிக்க அனுமதிப்போம் எனவும் பைடன் குறிப்பிட்டார்.

இதற்கு முன்னர் பலமுறை ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினை போர்க் குற்றவாளி என பைடன் வர்ணித்துள்ளார். எனினும் முதல் முறையாக இனப்படுகொலை என்ற குற்றச்சாட்டை அவர் நேற்றே முன்வைத்தார்.

இந்நிலையில் பைடனின் இந்தக் கருத்தை உக்ரேனிய ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கி வரவேற்றுள்ளார். ஒரு உண்மையான தலைவரின் உண்மையான வார்த்தைகள் இவை என அவர் தெரிவித்தார்.

ஒரு தேசிய இனத்தை அல்லது சமய குழுவை முழுதாகவோ அல்லது பகுதியாகவோ அழிப்பதை நோக்காக கொண்டு மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் இனப்படுகொலை என ஐ.நா. தீர்மானத்தில் வரையறுக்கப்பட்டுள்ளது.

யூத இனப் படுகொலையின் போது தனது சகோதரன் தவிர குடும்ப உறுப்பினர்கள் அனைவரையும் இழந்த ரபேல் என்பவர் இனப்படுகொலை சர்வதேச சட்டத்தின் கீழ் குற்றமாக இனங்காணப்பட வேண்டும் என பிரச்சாரங்களை முன்னெடுத்து வந்தார்.

இதனை அடுத்து 1948 டிசெம்பரில் இனப்படுகொலை குறித்த ஐ.நா. தீர்மானத்தில் இது உள்வாங்கப்பட்டு பின்னர் 1951 ஜனவரியில் நடைமுறைக்கு வந்தது.

ஒரு இனக் குழுவின் உறுப்பினர்களை கொல்வது குழுவின் உறுப்பினர்களுக்கு உடல் மற்றும் உள ரீதியாக மோசமான தீங்கினை ஏற்படுத்துவதும் இனப்படுகொலையாகக் கருதப்படுகிறது.

ஒரு இனக் குழுவில் புதிதாக பிறப்புக்களை தடுக்கும் நோக்கில் செயற்படுவது, குழந்தைகளை வலுக்கட்டாயமாக வேறொரு இனக்குழுவுடன் சேர்ப்பது, அத்துடன், ஒரு தேசிய இனத்தை அல்லது சமய குழுவை முழுதாகவோ அல்லது பகுதியாகவோ அழிப்பதை நோக்காக கொண்டு மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளும் இனப்படுகொலை என ஐ.நா. தீர்மானத்தில் வரையறுக்கப்பட்டுள்ளது.

ஆனால், இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பிறகு இது கடுமையாக விமர்சனத்திற்கு உள்ளானது.

இந்தத் தீர்மானம் மிகக் குறுகியதாக உள்ளது என்றும் வேறு சிலர் இது தவறாகப் பயன்படுத்தப்படுவதாகவும் குற்றம்சாட்டி வருகின்றனர்.

நாஜிக்களால் மேற்கொள்ளப்பட்ட யூதர்களுக்கு எதிரான நடவடிக்கை மட்டுமே கடந்த நூற்றாண்டில் நடந்த இன அழிப்பு என சிலர் கூறுகின்றனர்.

ஆனால், 1948ஆம் ஆண்டு தீர்மானத்தின்படி, குறைந்தது மூன்று இன அழிப்பு சம்பவங்களாகவது நடந்திருக்கின்றனவென வேறுசிலர் கணக்கிடுகின்றனர்.

முதலாவதாக, 1915க்கும் 1920க்கும் இடையில், ஓட்டோமான் துருக்கியர்களால் ஆர்மீனியர்கள் பெரும் எண்ணிக்கையில் படுகொலை செய்யப்பட்டமை.

அதன் பிறகு, நாஜிக்களால் 60 லட்சம் யூதர்கள் கொல்லப்பட்டமை.

மூன்றாவதாக, ருவாண்டாவில் 1994இல் டுட்ஸி, ஹூடு இனத்தைச் சேர்ந்த 8 லட்சம் பேர் கொல்லப்பட்டமை.

இவைதவிர, 1995இல் போஸ்னியாவின் ஸ்ரெப்ரெனீட்சாவில் நடந்தது இன அழிப்புஎனயுகோஸ்லோவியாவுக்கான சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் கூறியிருக்கிறது. இதுபோக, 1932-33ல் உக்ரைனில் சோவியத் ஒன்றியம் ஏற்படுத்திய செயற்கை பஞ்சம், 1975ல் கிழக்குத் திமோர் மீது இந்தோனேஷியா எடுத்த படையெடுப்பு, 1970களில் கம்போடியாவில் நடந்த க்மெர்ரூஜ் படுகொலைகளையும் சிலர் இனப்படுகொலையாக முன்வைக்கின்றமை குறிப்பிடத்தக்கது.



## பிலிப்பைன்ஸை தாக்கியது மெகி புயல்; 25 பேர் உயிரிழப்பு

பிலிப்பைன்ஸில் மெகி புயல் தாக்கியதில் ஏற்பட்ட நிலச்சரிவு மற்றும் வெள்ளத்தில் சிக்கி, இதுவரை 25பேர் உயிரிழந்துள்ளனர்.

கிழக்கு மற்றும் தெற்கு கடற்கரைகளில் சிக்கித் தவிக்கும் மக்களை மீட்க மீட்புக் குழுவினர் இன்றும் போராடிக் கொண்டிருக்கின்றனர்.

உள்நாட்டில் மெகி - அகடன் புயல், நேற்று முன்தினம் மணிக்கு 65 கிலோ மீற்றர் வேகத்தில் காற்றுடன் தீவுக்கூட்டத்தைத் தாக்கியது.

புயல் கிழக்கு கடற்கரையை தாக்கியதால் 13,000க்கும் மேற்பட்ட மக்கள் உயரமான பாதுகாப்பான இடங்களில் தங்கியுள்ளனர்.

கனமழை மற்றும் காற்றினால் மின்சாரம் துண்டிக்கப்பட்டதுடன், வீடுகள் மற்றும் வயல்களில் வெள்ளம் புகுந்துள்ளதால் மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த ஆண்டின் முதல் புயல் இது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பிலிப்பைன்ஸை பொதுவாக ஒவ்வொரு வருடமும் சராசரியாக 20 புயல்கள் தாக்குகின்றன என தெரிவிக்கப்பட்டுள்ளது.




## ரஷ்யாவுக்கு விடைகொடுத்த நோக்கியா!

தொலைத்தொடர்பு நிறுவனமும் 5 ஜி தொழில்நுட்ப விநியோக நிறுவனமுமான நோக்கியா, ரஷ்ய சந்தையில் இருந்து வெளியேறுவதாக அறிவித்துள்ளது. உக்ரைன் மீது போர் தொடுத்தன் காரணமாக ரஷ்யாவில் இருந்து பல முன்னணி நிறுவனங்கள் தங்கள் சேவையை நிறுத்தின.

பல உற்பத்தி நிறுவனங்களும் ரஷ்யாவில் இருந்து வெளியேறுவதாக அறிவித்து வரும் நிலையில், தற்போது நோக்கியோ நிறுவனமும் இந்தப் பட்டியலில் இணைந்துள்ளது.

பின்லாந்து நாட்டை தலைமையிடமாகக் கொண்ட நோக்கியா, தனது மொத்த வணிகத்தில் 2 சதவீதம் மட்டுமே ரஷ்யாவின் பங்களிப்பு இருப்பதாக தெரிவித்துள்ளது. மேலும், இதனால் தனது ஆண்டு வர்த்தகத்தில், இது பெரிய அளவில் தாக்கத்தை ஏற்படுத்தாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தென்னாபிரிக்காவில் வெள்ளம் 20 பேர் பரிதாபமாக உயிரிழப்பு

தென்னாபிரிக்காவின் கிழக்கு மாகாணமான குவாசுலு-நடாலில் கனமழையால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு காரணமாகக் குறைந்தது 20 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும், பலர் காணாமல் போயுள்ளனர் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

குவாசுலு-நடாலின் அவசர சேவைகளின் செய்தித் தொடர்பாளர் ராபர்ட் மெக்கென்சி கூறுகையில், மண்சரிவு மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலிருந்து மக்களை வெளியேற்றி வரும் பணியைப் பேரிடர் மேலாண்மை செய்து வருகிறது. இப்பகுதியில் கட்டடங்கள், சாலைகள் மற்றும் மின் இணைப்புகள் துண்டிக்கப்பட்டுள்ளன. மக்கள் முடிந்தவரை வீட்டுக்குள்ளேயே இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

திங்கட்கிழமை இரவு முதல் குவாசுலு-நடாலில் பலத்த மழை பெய்து வருகிறது. இதெக்வினி நகராட்சி மற்றும் டர்பன் நகரம் ஆகியவை கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன.



காலைக்கதிர் மாலைப்பதிப்பு



## ஏப்ரல் 14ம் திகதி இனி சமத்துவ நாளாகக் கொண்டாடப்படும்

# அம்பேத்கருக்கு வெண்கலச் சிலை நிறுவப்படும் என்கின்றார் ஸ்டாலின்



தமிழகத்தில் இனி அம்பேத்கர் பிறந்த நாளான ஏப்ரல் 14ம் திகதி சமத்துவ நாளாகக் கொண்டாடப்படும் என சட்டப் பேரவையில் முதல்வர் ஸ்டாலின் அறிவித்துள்ளார். தமிழக சட்டசபை விதி எண் 110ன் கீழ் முதல்வர் ஸ்டாலின் பேசியதாவது 'அண்ணல் அம்பேத்கர் வடக் கில் உதித்த சமத்துவ சூரியன்; பலர் வாழ்வில் கிழக்காய் இருந்த பகலவன்; சமூகம் ஏற்படுத்திய ஏற்றத் தாழ்வை, கல்வி, சட்டம், அரசியல் எழுச்சி மூலமாக சமப்படுத்திய போராளி; 'இருட்டறையில் இருக்குதடா உலகம்; சாதி இருக்கிறதென்போனும் இருக்கின்றானே' என்ற புரட்சிக் கவிஞர் பாரதிதாசனுடைய வரிகளைப்போல, சாதிக் கொடுமையால் இருண்ட உலகத்தைத் தன்னுடைய பரந்த அறிவால், ஞானத்தால் விடிய வைத்த விடிவெள்ளி அண்ணல் அம்பேத்கர் அவர்கள். அவர் வேண்டாததை நீக்கிய சிற்பி; வேண்டியதைச் சேர்த்த ஓவியர்; அண்ணல் அறிவுச்சுடராய் விளங்கி அரசியலமைப்புச் சட்டத்தை வகுத்துக்கொடுத்தவர். அவருடைய கருத்துக்கள் ஆழமும், விரிவும் கொண்டவை; எதிர் காலத்திற்கு ஒளிவிளக்கு அது.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பாக மாநில அளவிலான உயர்நிலை விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்புக் குழுக் கூட்டம் நேற்று நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் பெரியார் பிறந்தநாளை 'சமூகநீதி நாளாக' அறிவித்தது போல, அண்ணல் அம்பேத்கர் பிறந்த நாளான ஏப்ரல் 14 ஆம் திகதியை 'சமத்துவ நாள்' என்று கொண்டாட வேண்டுமென்ற கோரிக்கை எழுப்பப்பட்டது. இந்தக் கோரிக்கையை ஏற்று, ஏப்ரல் 14 ஆம் திகதி இனி சமத்துவ நாளாகக் கொண்டாடப் படும் என்றும், சமத்துவ நாள் உறுதிமொழி தமிழ்நாடு முழுவதும் எடுத்துக்கொள்ளப்படும் என்றும் மகிழ்ச்சியோடு இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நேற்றைய கூட்டத்தில் அண்ணல் அம்பேத்கர் மணிமண்டபத்தில், அண்ணலுடைய முழு அளவு வெண்கலச் சிலையை நிறுவ வேண்டுமென்ற கோரிக்கையை விடுதலைச்சிறுத்தைகள்கட்சியினுடைய தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான முனைவர் தொல். திருமாவளவன் முன்வைத்தார். அந்தக் கோரிக்கையையும் ஏற்று, அண்ணல் அம்பேத்கர் மணி மண்டபத்தில் முழு உருவ வெண்கலச் சிலை நிறுவப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் ஒன்றிய அமைச்சருமான திரு. ஆ.ராசா அவர்கள், பெரியாருடைய நூல்களை 21 மொழிகளில் மொழி பெயர்த்தமையை பாராட்டியதோடு, அண்ணல் அம்பேத்கருடைய தேர்ந்தெடுக்கப்பட்ட நூல்களைத் தமிழில் வாசிக்க வாய்ப்பாக மொழிபெயர்த்துப் புதுப்பிக்க வேண்டும் என்ற ஒரு கோரிக்கையை விடுத்திருந்தார். அந்தக் கோரிக்கையும் ஏற்றுக்கொள்ளப்பட்டு, தமிழக அரசால் அண்ண லுடைய தேர்ந்தெடுக்கப்பட்ட நூல்கள் செம் பதிப்பாக தமிழில் வெளியிடப்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

சமூகநீதியின் நோக்கம் சமத்துவத்தை அடைவதே என்பதையும், இவ்விரண்டும் நம் இலக்கின் இரண்டு கண்கள் என்பதையும் இந்த மாமன்றம் மட்டுமல்ல; இந்தியத்துணைக்கண்டமே அறியும். தமிழர்கள் அனைவரும் உயர்ந்த நிலையை அடைய, எத்தகைய விண்ணப்பம் வந்தாலும், அதை உடனே பரிசீலித்து ஆவன செய்கிற ஆட்சிதான் இப்போது நடக்கிறது என்பதைத் தெரிவித்து, இந்தளவில் இந்த அறிவிப்பை நிறைவு செய்து அமைகிறேன்.' இவ்வாறு அவர் பேசினார்.

# கச்சத்தீவை மீட்டெடுப்பதே தமிழ்நாடு அரசின் குறிக்கோள்


## மீன்வளத்துறை கொள்கை விளக்க குறிப்பில் தகவல்



கச்சத்தீவை மீட்டெடுப்பதே தமிழ்நாடு அரசின் முதன்மையான குறிக்கோளாக உள்ளது என மீன்வளத்துறை தெரிவித்துள்ளது. இது தொடர்பாக சட்டப்பேரவையில் தாக்கல் செய்யப்பட்ட மீன் வளத்துறை கொள்கை விளக்க குறிப்பை தாக்கல் செய்தது.

இதில் பாரம்பரிய கடற்பகுதியில் மீனவர்கள் மீன்பிடிக்கும் போது இலங்கையால் கைது செய்யப்படுகின்றனர். இலங்கை அரசு கைது செய்து அடைக்கின்றமை மீனவர்கள் மத்தியில் கவலையை வரவழைக்கிறது. மீனவர்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

கச்சத்தீவை மீட்பது தான், மீனவர்களின் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வாக இருக்கும். இந்திய மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமைகளை மீட்டெடுப்பதே அரசின் குறிக்கோள். கச்சத்தீவை மீட்டெடுப்பதன் மூலமே பாரம்பரிய கடற்பரப்பில் மீன் பிடிக்கும் உரிமையை மீட்டெடுக்க முடியும். கடந்த இரண்டு ஆண்டுகளில் இலங்கை அரசால் பிடிக்கப்பட்ட 88 படகுகள் மற்றும் 23 மீனவர்களை மீட்க அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது இவ்வாறு அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.



# ஜாலியன் வாலாபாக் படுகொலை நடந்த தினம் இன்றாகும்

## பிரதமர் நரேந்திர மோடி நேரில் மரியாதை

ஜாலியன் வாலாபாக் படுகொலையில் கொல்லப்பட்ட மக்களுக்கு பிரதமர் நரேந்திர மோடி இன்று மரியாதை செலுத்தினார். 1919ம் ஆம் ஆண்டு இந்நாளில் ஜாலியன் வாலாபாக்கில் வீரமரணம் அடைந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்துகிறேன் என பிரதமர் மோடி தனது டுவிட்டர் பக்கத்தில் குறிப்பிட்டார். அவர்களின் ஈடு இணையற்ற துணிவும் தியாகவும் வரும் தலைமுறையினரை ஊக்குவிக்கும். கடந்த ஆண்டு புதுப்பிக்கப்பட்ட ஜாலியன் வாலாபாக் ஸ்மாரக் வளாகத்தின் திறப்பு விழாவில் எனது உரையைப் பகிர்ந்து கொள்கிறேன் எனவும் குறிப்பிட்டார். 1919ம் ஆண்டு நடந்த ஜாலியன் வாலாபாக் படுகொலை நடந்த தினம் இன்று.

ஜாலியன் வாலாபாக் படுகொலையில் ஏராளமான மக்கள் வீரமரணம் அடைந்தனர். காலனித்துவ நிர்வாகத்திற்கு அடக்குமுறை அதிகாரங்களை வழங்கியரவுலட்சட்டங்களுக்கு எதிராக அமைதியான முறையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட நூற்றுக்கணக்கான மக்கள் பிரிட்டிஷ் படைகளால் சுட்டுக் கொல்லப்பட்டனர். அவர்களை நினைவுகூறும் வகையிலும், அவர்களுக்கு மரியாதை செய்யும் வகையிலும் பிரதமர் மோடி இன்று மரியாதை செலுத்தினார்.

# ஈஸ்வரப்பாவுக்கு முதல்வர் பசவராஜ் பொம்மை அழைப்பு கர்நாடக ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ராஜினாமா?



கர்நாடக ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஈஸ்வரப்பா ராஜினாமா செய்ய உள்ளார் என தகவல் வெளியாகியுள்ளது.

கர்நாடகாவின் பெலகாவியை சேர்ந்த ஒப்பந்ததாரர் சந்தோஷ் பாட்டீல் என்பவர் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஈஸ்வரப்பா மீது லஞ்ச புகார் கூறி வெளியிட்ட வீடியோ பரபரப்பை ஏற்படுத்தியது. திடீரென சந்தோஷ் பாட்டீல் மர்மமான முறையில் உயிரிழந்த நிலையில் தனது முடிவுக்கு ஈஸ்வரப்பாவே காரணம் என எழுதிய தற்கொலை குறிப்பும் கிடைத்தது. தன் மீதான புகாருக்கு ஈஸ்வரப்பா மறுப்பு தெரிவித்தார். அவர் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என காங்கிரஸ் போர்க்கொடி தூங்கியதால் உரிய விசாரணை நடத்தப்படும் என கர்நாடக முதலமைச்சர் பசவராஜ் பொம்மை கூறியிருந்தார்.

இதனை தொடர்ந்து ஈஸ்வரப்பா மற்றும் அவரது உதவியாளர்கள் 2 பேர் மீது தற்கொலைக்கு தூண்டினர் என உடுப்பி பொலிஸார் வழக்குப்பதிவு செய்துள்ளனர்.

இதனிடையே முன்னாள் முதலமைச்சர் சித்தராமையா, காங்கிரஸ் மூத்த தலைவர் சிவக்குமார் ஆளுநரை நேரில் சந்தித்தனர். அப்போது ஈஸ்வரப்பாவை பதவி நீக்கம் செய்ய கோரி அவரிடம் மனு அளித்தனர். அமைச் சர் ஈஸ்வரப்பா ராஜினாமா செய்ய உள்ளார் என தகவல் வெளியாகியுள்ளது.

இதனிடையே தன்னை நேரில் வந்து சந்திக்குமாறு முதல்வர் பசவராஜ் பொம்மை அழைப்பு விடுத்துள்ளார். சந்திப்பிற்கு பிறகு அடுத்தக்கட்ட முடிவு எடுக்கப்படும் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

## பொருளாதார நிலையை கவனத்தில் கொண்டு

# தேவையற்ற செயலணிகளை கலைத்து விடக் கோரிக்கை



(நூருள் ஹுதா உமர்)

நாடுஎதிர்நோக்கும்பாரிய பொருளாதார நெருக்கடியில் ஒரே நாடு ஒரே செயலணி, தொல்பொருள் செயலணி போன்ற அவசியமற்ற செயலணிகளைக் கலைத்துவிட வேண்டும் என ஐக்கிய காங்கிரஸ் கட்சி (உலமா கட்சி) தலைவர் முபாறக் அப்துல் மஜீத் தெரிவித்துள்ளார்.


இதுபற்றி அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நாட்டில் தேவையற்ற பிரச்சினைகளை உருவாக்கிய ஞானசார தேரரை, 'ஒரே நாடு - ஒரே சட்டம்' செயலணி அமைத்ததன் மூலம் வேறு சூழலுக்குள் தள்ளி அவரது வாய் மூடப்பட்டது என்பது உண்மை. அச்செயலணியினர் ஜனாதிபதி செயலகத்தில் மட்டும் இருந்து கொண்டு அறிக்கை தயாரிப்பர் என்றே நாம் நினைத்தோம்.

ஆனால் பின்னர் அச்செயலணியை வைத்துக்கொண்டு அவரும் அதன் உறுப்பினர்களும் நாடு முழுவதும் சுற்றுப்பயணம் செய்ததன் மூலம் அரச நிதி துஷ்பிரயோகம் செய்யப்பட்டமை மட்டுமின்றி இனங்களுக்கிடையில் சந்தேகங்களையும் அச்செயற்பாடு உருவாக்கியது.

நாட்டின் குற்றவியல் சட்டம், சிவில்சட்டம்எனபெரும்பாலான சட்டங்கள் அனைவருக்கும் பொதுவாகவே உள்ளன. திருமணச் சட்டம் மட்டுமே ஒவ்வொரு இனத்துக்கும் ஏற்ற வகையில் உள்ளன. இச்சட்டத்தால் இன்னொரு இனம் பாதிக்கப்படுவதில்லை. இப்போது 'ஒரே நாடு-ஒரே சட்டம்' என்ற ஞானசாரதேரரின்'தியறி'தோற்றுப்போனதாலும், இச்செயலணி அநாவசிய செலவுகளை ஏற்படுத்தியிருப்பதாலும் அச்செயலணியை கலைப்பதே நாட்டுக்கு நல்லது என்ற ஆலோசனையை எமது கட்சி முன்வைக்கிறது.

அதே போல் தொல்பொருள் செயலணியும் பிரயோசனமற்றது. அது வீண் செலவுகளை ஏற்படுத்துவதுடன் இனங்களுக்கிடையில்மோதலை உண்டாக்குவதுமாகவும் உள்ளதால் இதுவும் கலைக்கப்படுவதே நாட்டின் எதிர்காலத்துக்கு சிறந்ததாகும். - என்று தெரிவித்துள்ளார்.



# பெற்றோல் பதுக்கி விற்றவர் காத்தான்குடியில் சிக்கினார்

மட்டக்களப்பு காத்தான்குடி பொலிஸ் பிரிவிலுள்ள காத்தான்குடியில் பல சரக்குக் கடையொன்றில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த 160 லீற்றர் பெற்றோலை காத்தான்குடி பொலிஸார் இன்று காலை கைப்பற்றியுள்ளனர்.

காத்தான்குடி பொலிஸாருக்குக் கிடைத்த தகவல் ஒன்றையடுத்து காத்தான்குடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி துமிந்த நயனசிறியின் ஆலோசனையின் பேரில் காத்தான்குடிபொலிஸ்நிலையக் குற்றத்தடுப்புபிரிவுப்பொறுப்பதிகாரி வை.விஜயராஜ் தலைமையில் சென்ற பொலிஸார் பதுக்கி வைக்கப்பட்டிருந்த பெற்றோலைக் கைப்பற்றியுள்ளனர்.

பொலிஸ் புலனாய்வு உத்தியோகத்தர்கள் இருவர்இந்த வர்த்தக நிலையத்தில் பெற்றோல் வாங்கியமையையடுத்து பொலிஸார்நடத்திய தேடுதலின் போது கொள்கலன்களில் பெற்றோல் பதுக்கி வைத்திருந்தமையைக் கண்டுபிடித்தனர்.

பல சரக்கு விற்பனை நிலையத்தின் உரிமையாளர் கைது செய்யப்பட்டுள்ள அதேவேளை, மேற்படி வர்த்தக நிலைய உரிமையாளர் பெற்றோலை அதிக விலைக்கு விற்பனை செய்துள்ளமையும்விசாரணைகளில் தெரிய வந்துள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

கைப்பற்றப்பட்ட பெற்றோலையும் கைது செய்யப்பட்ட நபரையும் மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்த நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

# பதிவாளர்கள் ஏழு பேருக்கு மட்டக்களப்பில் நியமனம்

(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)



மட்டக்களப்பு மாவட்டத்தில் மிக நீண்ட காலமாக வெற்றிடமாக காணப்பட்ட 07 பதிவாளர் பிரிவுகளிற்கான கிராமிய விவாக, பிறப்பு, இறப்பு மற்றும் முஸ்லிம் விவாக பதிவாளர்களுக்கான வெற்றிடங்களிற்கான பதிவாளர் நியமனங்களை வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மட்டக்களப்பில் இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் கிழக்கு மாகாண பிரதி பதிவாளர் நாயகம் வீ.திருவருள் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன் கலந்து கொண்டு சிறப்பித்தார். பதிவாளர்களுக்கான நியமனக் கடிதங்களையும் வழங்கி வைத்தார்.

நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி. நவரூபரஞ்ஜனி முகுந்தன், பிரதம கணக்காளர் திருமதி. இந்திராவதி மோகன், மண்முனை மேற்கு வவுணதீவு பிரதேச செயலாளர் எஸ்.சுதாகர் உள்ளிட்ட பதிவாளர்கள், பதிவாளர்களின் உறவினர்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது மட்டக்களப்பு மாவட்டத்தின் வாழைச்சேனை, ஏறாவூர், வவுணதீவு, களுவாஞ்சிகுடி மற்றும் காத்தான்குடி ஆகிய பிரதேச செயலக பிரிவுகளுக்குட்பட்ட ஏழு பதிவாளர்களிற்கான நியமனங்கள் வழங்கிவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# கள்ளச்சந்தையில் பெற்றோல் விற்ற மூவர் ஊறணியில் கைது

மட்டக்களப்புத் தலைமையகப் பொலிஸ் பிரிவிலுள்ள கருவப்பங்கேணி, ஊறணிப் பகுதிகளில் உள்ள பலசரக்கு கடைகளில் சட்டவிரோதமாகப் பெற்றோல் வியாபாரத்தில் ஈடுபட்ட 3 பேரை 30 லீற்றர் பெற்றோலுடன் நேற்று முன்தினம் கைது செய்துள்ளோம் என மட்டக்களப்புத் தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவல் ஒன்றிற்கமைய குறித்த பகுதியிலுள்ள பலசரக்குக் கடைகளை சம்பவ தினமான நேற்று பொலிஸார் முற்றுகையிட்டனர்.

இதன் போது சட்டவிரோதமாகப் பெற்றோல் வியாபாரத்தில் ஈடுபட்ட 3 கடை முதலாளிகளை கைது செய்தமையுடன் 30 லீற்றர் பெற்றோலை மீட்டுள்ளனர்.

இதில் கைது செய்யப்பட்டவர்களை நீதிமன்றில் ஆஜர் படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# மட்டக்களப்பில் சர்வோதயத்தின் மனித நேய ஒன்றிணைவுப் பணி






நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியின் மத்தியில் மட்டக்களப்பு மாவட்டத்தில் பின்தங்கிய பிரதேசங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட - கிழக்கு மாகாணத்தில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பெண்கள் தலைமை தாங்கும் - 50 குடும்பங்களுக்கு 2,600 ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொருள்கள் வழங்கும் நிகழ்வு மட்டக்களப்பு சர்வோதயம் நிறுவனத்தில் அதன் கிழக்கு மாகாண திட்டமிடல் பணிப்பாளர் ஏ.எம். கரீம் தலைமையில் 'மனித நேய ஒன்றிணைவு' எனும் வேலைதிட்டத்தின் கீழ் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள 14 பிரதேச செயலகப் பிரிவுகளிலுமிருந்து தெரிவு செய்யப்பட்ட பெண் பயனாளிகளுக்கு முதல் கட்டமாக சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு இவ்வாழ்வாதார உதவி வழங்கப்பட்டது.

மதத் தலைவர்களின் ஆசிர்வாதத்துடன் ஆரம்பமான இந்நிகழ்வில் 'இலங்கை எங்களை ஒன்றிணைக்கும் எங்களின் சொந்த பணி' எனும் கருத்திட்டத்திற்கமைவாக முன்னெடுக்கப்பட்ட வாழ்வாதார உதவித் திட்டம் வழங்கும் நிகழ்வில் டயலொக் மற்றும் ஹேமாஸ் நிறுவனங்களின் இந்த மனித நேய பணியில் இந்நிறுவனங்களின் மாவட்ட டயலொக் நிறுவனத் திட்டமிடல் பணிப்பாளர் எம்.தயாண் கலிங்க பெரேரா மற்றும் சந்தைப்படுத்தல் பணிப்பாளர் மற்றும் சர்வோதய நிறுவன உயர் அதிகாரிகள், பயனாளிகள் எனப் பலரும் அதில் கலந்து கொண்டனர்.

# வவுனியா நகரசபையின் அனுமதியின்றி இரவிரவாக கட்டப்படும் இஸ்லாமிய கலாசார மண்டப மதில்கள்

## இளைஞர்கள் மத்தியில் விசனம்



வவுனியா,ஏப்ரல்13

வவுனியா நகரசபைக்குட்பட்ட ஹொரவப் பொத்தானை வீதியில் அமைந்துள்ள இஸ்லாமிய கலாசார மண்டபத்தின் சுற்று மதில் நகரசபையின் அனுமதியின்றி இரவிரவாக அமைக்கப்பட்டு வருவதாக பொதுமக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

வவுனியா நகரசபைக்குட்பட்ட ஹொரவப் பொத்தானை வீதியில் இஸ்லாமிய கலாசார மண்டபம் அமைந்துள்ளது. அது அருகில் இருக்கும் வவுனியா குளத்தின் நீரேந்துப் பகுதிக்கு செல்லும் வாய்க்காலை அண்மித்ததாக அமைந்துள்ளது.அந்த கலாசார மண்டபத்திற்கான சுற்று மதில்களை அப் பகுதியில் கழிவு நீர் வடிந்து செல்லும் வாய்க்கால் ஊடாக அமைக்கப்பட்டு வருகின்றன.

குறித்த மதில் கட்டுமாண நடவடிக்கைக்கு வவுனியா நகரசபை அனுமதி வழங்காத நிலையில், புனித நோன்புக் காலத்தில் இரவிரவாக குறித்த கட்டுமானப் பணிகள் இடம்பெறுகின்றன எனப் பொது மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

வவுனியா மாவட்டத்தில் தமிழ், சிங்களம், முஸ்லிம் என மூவின மக்களும் ஒற்றுமையாகக் காலம் காலமாக வாழ்ந்து வருகின்றனர். இந்நிலையில் இந்த ஒற்றுமையை சீர்குலைக்கும் வகையில் முறையான அனுமதியின்றி இரவிரவாக – ஏனைய சமூக இளைஞர்கள் மத்தியில் விரக்தியை ஏற்படுத்தும் வகையில் – நோன்புக் காலத்தில் இஸ்லாமிய கலாசார நிலைய நிர்வாகத்தினர் இவ்வாறு கட்டுமானப் பணிகளை மேற்கொண்டு நடந்து கொள்ளும் முறை குறித்து அதிருப்தி வெளியிடப்படுகின்றது. இதற்கு எதிராக நகரசபை உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், இவ்வாறான சம்பவங்கள் சமூக ஒற்றுமையை சீர்குலைக்கும் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.



# செட்டிகுளம் பகுதியில் பஸ் வீதியை விட்டு விலகி விபத்து

## பயணிகள் அருந்தப்பு

கண்டியில் இருந்து மன்னார் நோக்கிச் சென்ற இ.போ.சபை பஸ் ஒன்று செட்டிகுளம் பகுதியில் வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானது. பயணிகள் மயிரிழையில் தப்பினர்.

செட்டிகுளம், மெனிக்பாம் பகுதியில் நேற்று முன்தினம் மாலை இவ் விபத்து இடம்பெற்றது.

மழைக்கு மத்தியில் பயணித்துக் கொண்டிருந்த பஸ் சாரதியின் கட்டுப்பாட்டையிழந்து வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானது.

பஸ்ஸில் அச்சமயம் 40 இற்கும் மேற்பட்ட பயணிகள் இருந்த போதும் எவருக்கும் எந்த பாதிப்பும் ஏற்படவில்லை. விபத்து குறித்து செட்டிகுளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# முன்னாள் போராளிக்கு புதிய வீடு இராணுவத்தினரால் கையளிப்பு



‘தலைக்கு நிழல்’ திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணம் ஜே/246 கிராமசேவகர் பிரிவின் மயிலிட்டி வடக்கு பிரதேசத்தில் வசிக்கின்ற புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் விடுதலைப் புலிகளின் உறுப்பினரான ராசவல்லன் தபோரூபனுக்காக நிர்மாணிக்கப்பட்ட புதிய இல்லத்தைக் கையளிக்கும் நிகழ்வில் பாதுகாப்புப் படைகளின் பிரதானியும் இராணுவத்தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா கலந்து கொண்டார். புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளிக்கு அவர் வாழ்த்துக்களைத் தெரிவித்தார். யாழ். பாதுகாப்புப் படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சுஜீவ செனரத்யாப்பாவினால் இல்லம் அதன் பயனாளிக்குக் கையளிக்கப்பட்டது. இந்நிகழ்வு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இல்லம் அமைப்பதற்கான பூரணநிதி அனுசரணையை நடராஜா வழங்கியிருந்தார். 515 ஆவது காலாட் படைப்பிரிவின் படைத்தளபதியின் நெறிப்படுத்தலின் கீழ் 10 ஆவது இலங்கை இராணுவ எறிகணைப் படையணியினரின் சரீர ஒத்துழைப்பின் மூலம் வீட்டின் நிர்மாணப் பணி மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வின் போது வீட்டிற்குத் தேவையான உபகரணங்கள், உலர் உணவுப் பொதிகள் என்பனவும் கட்டளைத் தளபதியினால் வழங்கிவைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் 55 ஆவது காலாட் படைப்பிரிவின் சேனாதிபதி, காலாட் படைப்பிரிவின் படைத்தளபதிகள், யாழ்ப்பாண பாதுகாப்பு படை தலைமையகத்தின் நிர்வாக பொறுப்பதிகாரி, நன்கொடையாளர் நடராஜா, இராணுவ உயரதிகாரிகள், வீட்டு உரிமையாளர்கள் உட்பட குறிப்பிட்ட அளவிலானோர் கலந்துகொண்டிருந்தனர்.

# மாங்குளம் ஸ்ரீ முத்துமாரியம்மன் இரதோற்சவம் சிறப்புறப் பூர்த்தி







(சண்முகம் தவசீலன்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாங்குளம் பாலைமரத்தடி ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தின் இரதோற்சவம் நேற்று முன்தினம் காலை மிகவும் சிறப்பான முறையிலே இடம்பெற்றது.

ஆலயத்திலேயே இடம்பெற்ற விசேட பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து எழுந்தருளிய அம்பாள் உள்வீதி வலம் வந்து, பின் தேரில் ஏறி வெளி வீதி வலம் வந்து, அடியவர்களுக்கெல்லாம் அருள் பாலித்தார்.

திங்கள் காலை இடம்பெற்ற இந்த இரதோற்சவப் பெருவிழாவில் பல நூற்றுக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு காவடி,பாற்செம்பு,கற்பூரச்சட்டி, அங்கப்பிரதட்சணம் போன்ற நேர்த்திக் கடன்களை நிறைவேற்றியமையையும் காணக்கூடியதாக இருந்தது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 13.04.2022இல் வெளியிடப்பெற்றது.